<u>முதன்மை மாவட்ட உரிமையியல்  நீதிமன்றம், நாகர்கோவில்</u>

<u>நாள். 04.06.2024</u>
<u>O.S. 53/2021</u>
<u>வா.சா.1 கனகசபாபதி</u>
<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வழக்கு சொத்து முன்பு தர்மபுரம் மேற்கு கிராமம் தற்போது தர்மபுரம் தெற்கு கிராமம் ஆகும். நீண்டகரை பி கிராமம் அதனுள் தர்மபுரம் கிராமம். வழக்கு சொத்து எனக்கும் என் 2 சகோரதர்களுக்கும் உரிமைப்பட்டது என்றால் என் அப்பா விலைக்கு வாங்கி எங்கள் மூவருக்கும் உயில் எழுதி கொடுத்தார். வழக்கு சொத்து எனக்கு உரிமைப்பட்டது. வழகது சொத்தின் கிழக்கு பக்க சொத்து ஐயாத்துரை சொத்து ஆகும். வடக்கு பக்கம் ஜாண்சன் சொத்து ஆகும். மேற்கு பக்கம் தங்கப்பன் சொத்து ஆகும். தெற்கு பக்கம் சிதம்பரதாணு செட்டியார் சொத்து ஆகும்.

நான் சொல்லியுள்ள சொத்தும் அடுத்த சொத்தும் என் தகப்பனார் விலைக்கு வாங்கிய சொத்து ஆகும். புல எண் 424/18 ல் என் அப்பா என் சகோதரர்களுக்கு சொத்து கொடுக்கவில்லை. என் சகோதரர்களுக்கு புல எண் 424/18 சொத்து கிடையாது என சொல்கிறேனா என்றால் என் அப்பா அந்த புல எண்ணில் என் சகோதரர்களுக்கு சொத்து கொடுக்கவில்லை. இந்த வழக்கு சொத்து நான் விலைக்கு வாங்கவில்லை என்றால் ஆம். என் அப்பா 15.5 சென்ட் விலைக்கு வாங்கினார்.

அந்த 15.5 சென்ட் எத்தனை பாகமாக பிரிக்கப்பட்டது என்றால் பாகம் பிரிக்கவில்லை. என் அப்பா 15.5 சென்ட்டையும் எனக்கு எழுதி கொடுத்துள்ளார் அது எந்த தேதி ஆண்டு என்று ஞாபகம் இல்லை. 2001ம் ஆண்டு உத்தேசமாக என் அப்பா உயில் எழுதி தந்துள்ளார். அச்சமயம் நான் அந்த சொத்தை அளந்து பார்த்தேனா என்றால் அந்த சமயம் நான்

அளந்து பார்க்கவில்லை. இந்த வழக்கில் அரசை ஒரு தரப்பினராக கட்சி சேர்த்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முனபு சட்டப்படியான அறிவிப்பை நான் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். நான் அறிவிப்பு எந்த தேதியில் கொடுத்தேன் என்று சரியாக ஞாபகம் இல்லை. அந்த அறிவிப்பு நகலை என் தரப்பு ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

சாட்சி வா.சா.ஆவணங்களை பார்வையிட்டு அந்த அறிவிப்பை தாக்கல் செய்யவில்லை என தெரிவித்தார். நான் சொன்னது போல் அறிவிப்பு அரசுக்கு கொடுக்கவில்லை என்றாலும் அவ்வாறு கொடுக்காததால் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. என் வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழகக்கு சொத்தில் 4 பக்க சொத்தின் உரிமையாளர்களை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் ஆம். அவர்கள் வழக்கில் சம்பந்தப்படவில்லை. நான் 4 பக்க சொத்து உரிமையாளர்களை கட்சி சேர்க்காததால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

நான் 1ம் பிரதிவாதியின் சொத்து அளந்து பார்த்தேனா என்றால் இல்லை. என் தகப்பனார் எனக்கு உயில் பத்திரத்தின் படி எழுதி தந்த சொத்து என் கைவசம் உள்ளது என்றால் ஆம். 1975ம் ஆண்டு சொத்துகள் மறுஅளவீடு செய்யப்பட்டது என்றால் சரி. மறுஅளவீட்டில் குறைபாடு இருப்பின் மேல்முறையீடு 1978 ம் ஆண்டிற்குள் செய்யவேண்டும் என்றால் எனக்கு அந்த சமயம் உடல்நலம் சரியில்லை.

அவ்வாறு மேல் முறையீடு செய்யாவிட்டால் பின்னர் நீதிமன்றத்தை அணுக இயலாது என்று பல முன் தீர்ப்புகள் உள்ளது என்றால் 1985ம் ஆண்டு சொத்து வாங்கியது முதல் 2021ம் ஆண்டு வரை பிரச்சனை

இல்லை. நான் வழக்கில் குறிப்பிட்டுள்ள பிரச்சனை தொடர்பாக நான் வருவாய் துறைக்கு எந்த புகார் மனுவும் கொடுத்திருந்தேனா என்றால் 2021ம் ஆண்டு வரை புகார் அனுப்பக்கூடிய அளவில் எந்த பிரச்சனையும் இல்லை. இந்த வழக்கில் நான் 1ம் பிரதிவாதி விலை பத்திரத்தை ரத்து செய்ய வேண்டி எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான்.

என் அப்பா 1985ம் ஆண்டு விலைக்கு வாங்கினார். என் அப்பா சொத்தை விலைக்கு வாங்கிய போது அளந்து பார்த்தாரா என்றால் அளந்து பார்த்தார். வழக்கு சொத்திற்கும் 1ம் பிரதிவாதி சொத்திற்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் 1ம் பிரதிவாதி சொத்து வழக்கு சொத்தின் பக்கத்து பூமியாகும். வழக்கு சொத்தினை அளந்து திட்ப்படுத்த நான் வருவாய் துறைக்கு மனு கொடுத்திருந்தேனா என்றால் இல்லை. நான் வருவாய் துறையிடம் அவ்வாறு மனு செய்யாததால் இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

எல்கை கல்லை அகற்றிவிட்டார்களா என்றால் அகற்ற முற்பட்டார்கள் நான் தடுத்தேன். தற்சமயம் அகற்றிவிட்டார்களா என தெரியவில்லை அது குறித்து நான் நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் ஈத்தாமொழி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் அந்த புகார் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். வா.சா.ஆ 4,5,6 ஆவணங்கள் இந்த வழக்கு தாக்கல் செய்யய வேண்டி நான் தயார் செய்தவை என்றாலும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு உள்ள ரசீதுகள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் நான் பழைய ரசீதுகளை தாக்கல் செய்யவில்லை தற்சமயம் உள்ள ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன்.

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்கு

ஒவ்வாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. நான் அந்த ஆவணங்களின் அடிப்படையில் நிவாரணம் கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பரிகாரம் கிடைக்ககூடியது அல்ல என்றாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.